யாழ்ப்பாணம்
நல்லூர் இளைநூலகம்

# திருமலையில் மோதல்; இராணுவ சிப்பாய் பலி

[கொழும்பு]

திருகோணமலையில் ராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைெற்றமோதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் பலியானதாகவும் பலர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

திருகோணமலையில் உள்ள திரியாய் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்றமோதலில் இராணுவச்சிப்பாய் ஒருவர் பலியானதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

மேற்படி பகுதியில் அண்மையில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையில் ஏற்கனவே நடைபெற்ற மோதல் ஒன்றில் 15 இராணுவத்தினர் பலியானது குறிப்பிடத்தக்கது. க-வி-இ

விலை ரூபா 5. 00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 09 இதழ் 108
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23 - 5 - 1995

## புலிகள் புதிய யுத்த தந்திரங்களைக் கையாள்கின்றனர்

[கொழும்பு]

இராணுவம் புதிய புதிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும்போது, விடுதலைப் புலிகள் புதிய புதிய யுத்த தந்திரோபாயங்களைகையாளுகின்றனர் என்று 'த ஐலன்ட்' பத்திரிகை செய்தி வெளியிடுள்ளது.

அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த பின்னர் ஏற்பட்ட மொதல்களில், வடக்கிலும்-கிழக்கிலும் விடுதலைப் புலிகள் தமது யுத்த தந்திரங்கள் மூலம் முன்னே

(5-ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் தாக்குதல்களை சமாளிக்க

# கொழும்பு துறைமுக பாதுகாப்பு கடற்படையிடம் ஒப்படைப்பு

## முக்கிய கப்பல்கள் மட்டுமே துறைமுகத்துக்குள் அனுமதி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களிலிருத்து கொழும்புத் துறைமுகத்தைப் பாதுகாப்பதற்கு அரசு துரித நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனைப்படி கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பு இப்போது ஸ்ரீலங்கா கடற்படையின் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. அவசியமான கப்பல்கள் மாத்திரமே கொழும்புத் துறைமுகத்துக்குள் அனுமதிக்கப்படுகின்றன. ஏனைய கப்பல்கள் அனைத்தும் காலித் துறைமுகத்துக்கு திருப்பிவிடப்படுகின்றன.

(5ம் பக்கம் பார்க்க)

## மீனவர் குடியிருப்புகள் மீது கடற்படை தாக்குதல்

(வடமராட்சி)

நேற்றுக் காலை 6-00 மணியளவில் வெற்றிலைக்கேணி கடற்பிராந்தியப் பகுதியிலிருந்து ஒரு பாரிய கடற்படை கப்பலுடனும் நான்கு சிறிய அதி விசைப்படகுகளுடனும் வந்த கடற்படையினர் ஆதிகோவிலடி, வல்வெட்டித்

(6ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து கவலையடைகிறேன்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டின் வடக்கு-கிழக்குப்பகுதிகளில்இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமை குறித்து நான் மிகுந்த கவலையடைகின்றேன்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இவ்வாறு கூறினர்.

நாட்டுமக்களுக்கு ரூபவாஹினி மூலம் நேற்று விசேட உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## வயோதிபரை ராணுவம் பிடித்தது

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் குட்டியப் புலம் தோட்டப்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் மேலும் ஒருவர் இராணுவத்தின் பிடிக்குள் சிக்கிக்கொண்டார்.

குட்டியப்புலத்தில் இருந்து இடம் பெயர்ந்து புத்தூரில் வசிக்கும் சீனியர் முருகர் (59 வயது) என்பவரே இராணுவத்திடம் பிடிபட்டவராவார்

நல்லதம்பி என்பவருடனேயே இவரும் பிடிபட்டார் எனவும் இவர்கள் விடயமாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் இவர்களின் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

(5ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - அரசு முறுகல் நிலையை ஆஸி. அமைச்சர் தணிக்க முயற்சி!

[கொழும்பு[

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே தற்போது ஏற்படடுள்ள முறுகல நிலையை தணிக்கும் முயற்சியில் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஈடுபட்டதாக கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பீங்ஸ்பலூல் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரனைக்கு தீர்வு காணும் முயற்சியின் ஓர் அங்கமாகவே அமைச்சர் இவ்விவகாரததை கையாண்டார் என்றும் தெரிவிககப்படுகிறது.

[5-ம் பககம் பார்க்க]

## இலங்கை கடற்படையின் அச்சுறுத்தலைத் தடுக்க தமிழகத்தில் 7 கடற்படை பிரிவுகள் இயங்க வேண்டும்

### — ஜெயலலிதா வலியுறுத்து

(சென்னை)

தமிழக மீனவர்க்கு இலங்கை கடற்படையினரால் ஏற்படும் அச்சுறுத்தலை தடுக்க தமிழகத்தில் ஏழு கடற்படை பிரிவுகளை நிரந்தரமாக இயங்க மத்திய அரசு அனுமதி தர வேண்டும்.

இவ்வாறு தமிழக முதல

[5ம் பக்கம் பார்க்க]

## ஆஸி. அமைச்சர் நேற்று இலங்கை வருகை

(கொழும்பு)

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கரட் இவான்ஸ் நேற்று ஒருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வந்து சேர்ந்தார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அவுஸ்திரேலியாவிற்கான இலங்கை தூதுவர் ஆகியோர் அவுஸ்திரேலிய அமைச்சரை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பல அரசியல் தலைவர்களுடன் இவர் பேச்சுவார்த்தை நடாத்த இருந்தார். க:இ

## போர் வெடித்துள்ளபோதும் பேச்சுமூலமே பிரச்னைக்குதீர்வு

### — அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(சிங்கப்பூர்)

போர் வெடித்துள்ளபோதும் இலங்கையின் இனப் பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதுதான் அரசாங்கத்தின் இறுதிக் குறிக்கோளாகும்.

அண்மையில் சிங்கப்பூருடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளச் சென்ற வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமர், சிங்கப்பூர் வெளிநாட்டு அமைச்சர் எஸ் ஜெயகுமாரைச் சந்தித்தபோது

[5-ம் பக்கம் பார்க்க]

### கண்டெடுக்கப்பட்டது

மோட்டார் சைக்கிள் திறப்புக் கோர்வை ஒன்று ஆனைக் கோட்டைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது- உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

## கொழும்புக்கு "ஒடியல்"

[நெல்லியடி]

வடபகுதி ஒடியல், கப்பல் மூலமாக கொழும்புக்கு கொண்டு செல்வதற்கு இலங்கை பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 160

## நிவாரணம் வழங்கப்படுகிறது

(ஆனைப்பந்தி)

தீவக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பாவனையாளர்களுக்குரிய பங்குனிமாத கடைசி இரு வாரத்திற்கும் சித்திரை மாத முதல் இரு வாரத்திற்குமான நிவாரண உலர் உணவுப் பொருட்கள் தற்போது அந்தந்த சங்கங்களின் நிவாரணக் கிளைகளில் விநியோகிக்கப்படுகின்றன.

செயலக புனர் வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலின்படி அரிசி, மா, சீனி, பருப்பு, தேயிலை, சோப் வகைகள் என்பவற்றுடன் மூன்று அங்கத்தவருடைய குடும்பத்திற்கு லக்ஸ்பிறே, நான்கு அங்கததவருடைய குடும்பத்திற்கு கைலண்ட் ஆகிய பெருட்கள் வழங்கப்படுகின்றன. 101.சி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-05-23**

செவ்வாய்இரவு

- 08-02 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- 08-10 - அறிந்து கொள்ளுங்கள்
- 08-20 - நலந்தானா - மூட்டுகளில் ஏற்படும் வலிகள் பற்றி வைத்தியக்கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்
- 08-30 - செய்திகள்
- 08-40 - கருத்துக் களம் இ. இராஜேஸ்வரன் எழுதிய "முடிவுகள்'
- 08-50 - மலரும் மொட்டுக்கள்

**1995-05-24**

புதன் காலை

- 07-02 - மாவீர வணக்கம்
- 07-15 - நீங்கள் கேட்டவை
- 07-30 - செய்திகள்
- 07-35 - பத்திரிகைகச் செய்திகள்
- 07-40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-05-23**

செவ்வாய் மாலை

- 05-01 - சிந்தனைச் சிதறல்
- 05-02 - எழுச்சி கீதம்
- 05-10 - புதியவை
- 05-15 - தமிழிசை
- 05-30 - வானொலி மதியூகம்
- 06-00 - சிந்தனைக்குச் சில வினாடிகள்
- 06-02 - இவ்வாரம் இவர்
- 06-15 - விளையாட்டுச் செய்திகள்
- 06-20 - என்தெரிவு
- 06-30 - மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# அ. தி. மு. கவுடன் கூட்டு ஏற்படுத்த தேசிய முன்னணி முயல்கிறது

(சென்னை)

தேசிய முன்னணிக் கட்சிக்கும் அ. தி. மு.கவுக்கும்இடையில் இணைப்பு ஏற்படும் வாய்ப்புகள் தமிழகத்தில் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது

இதன் முன்னோடி நடவடிக்கையாக ஆந்திர மாநில முதல்வரும், தேசிய முன்னணித் தலைவருமான என், டி. ராமராவ் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

மேலும் தேசிய முன்னணியின் மற்றொரு தலைவரான கர்நாடக முதல்வர் தேவ கௌடாவும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்த மூத்த உறுப்பினர்களான முன்னாள் மனித வள அமைச்சர் அர்ஜூன் சிங், என். டி. திவாரி ஆகியோர் வெளியேறியதை அடுத்து காங்கிரஸ் கட்சி பலவீனமடைந்ததை தனக்கு சாதகமாக்க தேசிய முன்னணி முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் காங்கிரஸ் கட்சிக்கும்-அ, தி. மு. கவுக்கும் இடையில் சுமுகநிலை தற்போது இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. -க-சி

## சிம்லா உடன்பாட்டின்கீழ் காஷ்மீர் பிரச்னையை தீருங்கள்

(இஸ்லாமாபாத்)

1973ம் ஆண்டு கைச்சாத்தான சிம்லா ஒப்பந்தத்திற்கமைய காஷ்மீர் பிரச்னைக்கு தீர்வுகாண முற்படுமாறு இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் இருநாட்டு தலைவர்களிடமும் அண்மையில் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீர் ஷராரே ஷெரீப் நூர்தீன் பள்ளிவாசல் தீவைப்பு சம்பவம் தொடர்பாக இரு நாடுகள் மத்தியிலும் கசப்புணர்வுகள் அதிகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. க-சி

## பரீட்சை

(கொழும்புத்துறை)

இலங்கை வங்கியாளர் நிலையம நடத்தும் இடைநிலை மற்றும் இறுதிப் பரீட்சை எதிர்வரும் யூன் மாதம் 3-ம் திகதி சனிக்கிழமையும், 4 ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், 10ம் திகதி சனிக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் யாவும் அண்மையில் கோமாரி கப்பல் மூலம் யாழ் கல்வித்திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. 154

## ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் இவ்வாண்டு மேற்கொள்ளும் பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டங்களுக்கென ஒரு மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி வடக்கு-கிழக்கு மாகாண திட்டமிடல் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதிக்கான வேலைத் திட்டங்களும் தற்சமயம் நடைபெறுவதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார் -170-சி

## ரயில் ஓட்டிகள் மண வீட்டில் பயணிகள் நடுரோட்டில்!

(கொழும்பு)

ரயில் சாரதி ஒருவரின் திருமணத்திற்கு ஏனைய ரயில் சாரதிகள் சென்றதால் நேற்றுமுன்தினம் ரயில் சேவை பலமணி நேரம் ஸ்தம்பிதமடைந்தது.

கொழும்பில் தமது சகா ஒருவரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக ஏனைய ரயில் சாரதிகள் ஐவர் திருமண வீட்டிற்கு சென்று விட்டனர். இதனால் ரயிலை இயக்குவதற்கு சாரதிகள் இல்லாது போகவே ரயில் சேவை பலமணிநேரம் ஸ்தம்பித்துபோனதுடன் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் பயணிகள் கூச்சல் குழப்பம் விளைவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கோட்டை - களுத்துறை, கோட்டை - பொல்காவலை ரயில்கள் உட்பட பல ரயில் சேவைகள் காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவில்லையாம். முன் அறிவித்தலின்றி ரயில் சாரதிகள் தமது கடமைக்கு சமூகமளிக்காதது குறித்து ரயில்வே திணைக்களம் கடும் நடவடிக்கை எடுத்துள்ளது. -சி

## கடும் ஷெல் வீச்சில் நவக்கிரி பாடசாலையில் மாணவர் வரவு குறைவு

(யாழ்ப்பாணம்)

நவக்கிரிப்பகுதியில் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதையடுத்து அப்பகுதியில் அடிக்கடி இடம்பெறும் ஷெல் தாக்குதல்களினால் நவக்கிரி அமெரிக்கன் மிஷன் பாடசாலை இயங்கமுடியாதநிலை உருவாகியுள்ளது.

அங்கிருந்து பெரும்பாலான மக்கள் வெளியேறியதை அடுத்து அந்தப் பாடசாலை மாணவர்களின்வரவும் குறைநதுள்ளது.

சுமார் 250 மாணவர்கள் கல்விகற்று வந்த இப்பாடசாலைக்கு தற்போது பத்துக்கும் குறைந்த மாணவர்களே சமூகமளிக்கின்றனராம். 90-சி

## கொழும்பு துறைமுகத்திற்கு இந்தியகப்பல்கள் வரத்தடை

(கொழும்பு)

தூத்துக்குடியிலிருந்து கொழுமபுத் துறைமுகத்திற்கு செல்லும் கப்பல்களுக்கு இலங்கை கடற்படை தடை விதித்துள்ளது.

குறிப்பிட்ட கப்பல்கள் யாவும் காலி துறைமுகத்திற்கு திருப்பிவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் கொழும்பு துறைமுகத்தினுள் நடைபெறக் கூடும் என்ற அச்சத்தின் காரணமாகவே இவ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை தென்னிலங்கை துறைமுகங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன. க-சி

## உள்ளூர் உற்பத்தியில் கத்தி, கோடரி ஏற்றுமதி

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதி காமாட்சி இரும்புத் தொழிலகத்தினால் கத்திகள, கோடரிகள் தயாரிக்கப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் மட்டும் இதன் பாவனையை மேற்கொள்ளாமல் வன்னி பகுதியிலும் இதனை பாவிக்கும் நோக்கில் கடைசியாக உறபத்திசெய்த ஒரு தொகுதி கத்திகள், கோடரிகள் வன்னி பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. வன்னிப்பகுதிக்கு தேவையான கத்திகளை அனுப்ப நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. -சி

## மூன்று வயதுச் சிறுவன் நீச்சலில் சாதனை

[புதுடில்லி]

கோவாவைச்சேர்ந்தமூன்று வயதான மிக்கெல்தவோரா என்ற சிறுவன் ஒரு கிலோ மீட்டர் தூரமான நதியை 32 நிமிடத்தில் நீந்திக் கடந்து சாதனையொன்றைப் படைத்திருக்கிறான்.

மிகச் சிறிய வயதில் இப்படி ஒரு சாதனையை படைத்தசிறுவன் என்ற சர்வதேச பெயரை மிக்கெல் தவோராஇதன்மூலம் பெற்றிருக்கிறார். -இ-சி

## வடமராட்சி பகுதியில் ஆயுதக கண்காட்சி

(வடமராட்சி)

வடமராட்சிப்பகுதியில் நவீனரக ஆயுதக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

விடுதலைப்புலிகள் பயன்படுத்தும் அதிநவீன ஆயுதங்கள்வடமராட்சி மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு வருகின்றது.

ஸ்ரீலங்காவின் தரைப்படை, கடற்படை, வான் படை போன்ற முப்படைகளையும் விடுதலைப்புலிகள் எதிர்கொள்ளும் அனைத்துரக நவீன ஆயுதங்களும் இக் கண்காட்சியில இடம் பெற்றுள்ளது. 51-சி

## 'வித்யாசாகர்' பட்டம் வழங்கிக் கௌரவம்

(யாழ்ப்பாணம்)

சொற்பொழிவாளர் தமிழருவி த. சிவகுமாரனுக்கு "வித்யாசாகர்" என்னும் கௌரவ விருது வழங்கிப் பாராட்டும் வைபவம் அண்மையில் திருநெல்வேலி சிவன் கோவிலில் இடம்பெற்றது.

மேற்படி ஆலயத்தின் மகோற்சவ காலத்தில் 'திருவிளையாடற் புராணத்தை' சிறப்பாக விரிவுரை செய்தமையைப் பாராட்டியே யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியரும் காரைநகர் கம்பன் கழக அமைப்பாளருமாகிய தமிழருவித. சிவகுமாரனுக்கு இவ் விருது வழங்கப்பட்டது.

பிரதேசச் செயலரும் இந்து சமயப் பேரவையின் உபதலைவருமாகிய ஆ. மகாலிங்கம் "வித்யா சாகர்" எனும் கௌரவ விருதினை வழங்கினர். சிவசுரபி ஆறு திருமுருகன் பொன்னாடை போர்த்தியும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் பொற்பதக்கம் சூட்டியும தமது பாராட்டுதலை தெரிவித்துக் கொண்டனர்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி காங்கேயன் மேற்படி உரையிலிருந்து மாணவர்களுக்கான போட்டிப்பரீட்சையை நெறிப்படுத்தியிருந்தார். இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திரு. த. சிவகுமாரன் வழங்கினர். ர-சி

## கிளாலி பயணிகளிடம் பணம் கொள்ளை

[ஆனைப்பந்தி]

கிளாலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணி ஒருவரிடமிருந்து ரொக்கப் பணம் மற்றும் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: வலணையைச் சேர்ந்த நாகரத்தினம் என்பவர் தனது மகளுடன் கொழும்பிலிருந்து வந்து பின் கிளாலியிலிருந்து பஸ்ஸில் யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த போது சுமார் 4,750 ரூபா ரொக்கப்பணம் மற்றும் இருவரினது அடையாள அட்டைகள், பல்கலைக்கழக அனுமதிக் கடிதம் என்பன அடங்கிய பையொன்று களவாடப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பஸ்ஸில் காணப்பட்ட பயணிகள் நெரிசலை சாதகமாக்கியே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி பையை 'அபேஸ்' செய்துவிட்டதாகபிரஸ்தாபநபர்வேதனையுடன் தெரிவித்தார் - 101-சி

யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

### மணிவாக்கு

மனிதனுக்கு சாவு இல்லாத ஒரு தாய் தான் உண்டு: அது அவன் தாய்நாடுதான்.

— காண்டேகர்.

## நமது நோக்கு

### மீண்டும் படித்தால்...!

"பாதுகாப்பு என்றால் என்ன? பயம் அச்சுறுத்தல் ஆகியவற்றிலிருந்து மக்களை விடுவித்தலைத் தவிர வேறல்ல!"

பாதுகாப்பு என்றால் என்ன? அது எப்படி அமையவேண்டும்? என்றெல்லாம் விரிவாக விளக்கி எழுதப்பட்ட கட்டுரையிலேயே மேற்படி விளக்கம் தரப்பட்டுள்ளது.

14 வருடங்கள் படையிற் பணியாற்றிய அனுபவத்தோடு, ஆட்சிப் பொறுப்பில் இருந்த பிரபல அரசியற் குடும்பத்தைச் சேர்ந்த பெரியார் ஒருவரே, நாட்டு நன்மை கருதி பாதுகாப்புப் பற்றிய விளக்கம் தந்தார்.

யாரவர்? தற்போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் அனுருத்த ரத்வத்தையே 14-8-94ல் வெளிவந்த 'ரைம்ஸ்' பத்திரிகைக் கட்டுரையில் அழகான விளக்கம் அளித்திட்டார்.

அமெரிக்க — ருஷ்ய போர் முனைப்புக் குன்றிய இன்றைய காலகட்டத்தில், சமூகத்தின் பல்வேறு மட்டத்திலும் பாதுகாப்பின்மை என்ற நிலையை மாற்றிவிடுவதே முக்கிய குறிக்கோளாக அமையவேண்டும் என்று வேறு கூறி அரச பயங்கரவாதத்தால் அல்லற்பட்ட மக்களுக்குப் பால்வார்த்த மாதிரிப் பகர்ந்தார்!

இன்று — கட்டுரை எழுதி ஒரு வருடம் கூட ஆகவில்லை— அவர் செய்யும் நற்பணி என்ன?

பாதுகாப்பின்மை என்ற பயம் மக்களிடம் நீங்கிவிட்டதா?

மாறாக— கொழும்பிலும், கிழக்கிலும் மக்கள் படையினரிடம் அனுபவிக்கும் நாளாந்த துன்பம், அச்சுறுத்தல், பீதி அதிகரித்து வருகின்றன.

"பாதுகாப்புக்கு எனப் பெருஞ் செலவில் நிறுவப்பட்ட ஒரு இராணுவ அமைப்பே மக்களுக்கு அச்சுறுத்தல் தரும் அமைப்பாக மாறிவிட்டது!"

ஐ. தே. க. ஆட்சியின் ராணுவ அமைப்புப் பற்றி அனுருத்த ரத்வத்தை நாட்டு மக்களுக்கு விளக்கியிருந்தார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியை அலங்கரிக்கும் அவரால் மக்கள் பாதுகாப்புக்கு ஏற்றவகையில் இராணுவம் மறுசீரமைக்கப்பட்டிருக்கிறதா?

பதவிக்கு வருமுன் கூறியதெல்லாம் காற்றோடு கலந்துவிட்டன. ஆனால்— எழுதியவை அப்படியே அழியாது உள்ளன.

ஆற அமர இருந்து தானே எழுதியதை மீண்டும் அமைச்சர் படிப்பது நாட்டு நலனுக்கு நல்லது!

# பலாலி படைத்தள ராடரில் புலிகளின் விமானம் தெரிந்தது

(சொழும்பு)

விடுதலைப்புலிகள் அண்மையில் தம் வசமுள்ள விமானம் ஒன்றை யாழ்ப்பாணப் பகுதியில் பறக்கவிட்டு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் இது பலாலி இராணுவ தளத்திலுள்ள ராடரில் தெரிந்ததாகவும் படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடபகுதி கடற்கரையூடாக வெளிநாடொன்றிலிருந்து யாழ் குடாவிற்குள் கொண்டு வரப்பட்ட இலகுரக விமானத்தின் உதிரிப்பாகங்களை விடுதலைப்புலிகளின் பொறியியலாளர் பிரிவினர் சேர்ந்து விமானத்தை உருவாக்கியுள்ளனர்.

இந்த விமானம் அண்மையில் பரிசோதனை முயற்சியாக பறக்கவிடப்பட்டு பரிசோதிக்கப்பட்டுள்ளது, இவ்விமானம் யாழ்ப்பாணப்பகுதியில்பறந்த போது பலாலி படைத்தளத்தில் வைக்கப்பட்டுள்ள சக்திவாய்ந்த ராடர்திரையில் இது தெரிந்ததாகவும் படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த விமானத்தில் தனி ஒருவரே செல்லக்கூடிய விதத்தில் ஒற்றை ஆசனம் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் விடுதலைப் புலிகளின் விமானப் படைப்பிரிவில் லைசன்ஸ் பெற்ற விமான ஓட்டி ஒருவர் இணைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. புலிகள் தமது விமானங்களை பறக்க விடுவதற்காக இரண்டிற்கும் மேற்பட்ட இடங்களில் விமான ஓடுபாதைகளை அமைத்துமுள்ளனராம்.

இந்த விமானங்களை புலிகள் தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தும் விதத்தில் வடிவமைத்துள்ளதாகவும் படையினர் கூறியுள்ளனர். -சி

## கொட்டும் மழையிலும் படையினர் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவத்தினர் நேற்று முன்தினமிரவு 10-30 மணியளவில் கொட்டும் மழைக்கும் மத்தியிலும் கரையோரப் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதலை தொடர்ச்சியாக மேற்கொண்டனர்.

சுமார் இரண்டு மணி நேரமாக இராணுவத்தினர் இந்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டதோடு இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர்.

இராணுவத்தினரின் இந்த ஷெல் தாக்குதல், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களை அடுத்து கரையோரப் பகுதி மக்கள் பெரும் பீதியடைந்து காணப்பட்டனர்

மின்னலுடன் கூடிய இடி முழக்கத்துடன் மழைகொட்ட மறுபக்கம் இராணுவ ஷெல் தாக்குதலாலும் நேற்று முன்தினமிரவை கரையோர பகுதி மக்கள் பெரும் பதற்றத்துடன் கழித்ததாக தெரிவிக்கப்பட்டது. -170-சி

# பாரிய தாக்குதலுக்கான திட்டம் துரிதகெதியில் தயாரிக்கப்படுகிறது

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய தாக்குதல்களை நடாத்துவதற்கான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக படை வட்டாரங்கள் கூறியதாக ஏ. எவ். பி. செய்தி தெரிவித்தது.

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளை முறியடிக்க குறுகிய கால, நீண்டகாலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களை தயாரிப்பதில் இலங்கை வந்துள்ள அமெரிக்க இராணுவ ஆலோசகர்களும் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைப் படையினருக்கு தேவையான இராணுவ தளபாடங்களும் ஆயுதங்களும் வரத் தொடங்கியதையடுத்து படையினர் தமது தாக்குதல்களை தீவிரப்படுத்த திட்டமிட்டுள்ளனராம் வடக்கில் முற்றுகைக்குள் இருக்கும் படைமுகாம்களை விடுவித்து அங்குள்ள படையினரை காப்பாற்றும் நோக்கில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

மேலும் வடக்கில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையில் ஆயிரக்கணக்கில் துருப்புக்களை ஈடுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது தற்போது படையினர் தயாரிக்கும் திட்டங்கள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவரது அங்கீகாரம் கிடைத்ததும் தாககுதல்கள் ஆரம்பிக்கப்படும் எனவும் பாதுகாப்புச் செய்தியாளர்கள் கூறுகின்றனர். சி

### உதவிப் பணம் கொடுப்பனவு

(கொழும்புத்துறை)

தென்மராட்சி பிரதேச சபைச் செயலாளர் பிரிவில் தற்போது காசநோய், தொழுநோய், புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் தர்மப்பணம் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

இக்கொடுப்பனவு தென்மராட்சிப் பகுதியிலுள்ள சகல அஞ்சல் அலுவலகங்களிலும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. -154

# பாரிய தாக்குதலுக்கு முன்பாக படை அதிகாரிகள் மாற்றம்

[கொழும்பு]

வடக்கு - கிழககில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய தாக்குதல்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் படைத் தளபதிகளையும், படை உயர் அதிகாரிகளையும் மாற்றுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

யுத்த முனையில் திறமையாக செயற்படக்கூடிய தளபதிகளையும், அதிகாரிகளையும் பதவி உயர்வுகள் வழங்கி யுத்தத்தில் ஈடுபடுத்தவும் முன்னைய படை நடவடிக்கைகளின் போது தோல்விக்கு காரணமாயிருந்த தளபதிகளையும், அதிகாரிகளையும் மாற்றவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக கடந்த ஒரு வாரத்தில் வடக்கு-கிழக்கு பிராந்தியப் படை நடவடிக்கைக்கு பொறுப்பாக மேஜர் ஜெனரல் ரோகான் தளுவத்த நியமிக்கப்பட்டிருப்பதுடன் அந்த இடத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த மேஜர் ஜெனரல் ஏ. எம். யு. செனிவிரத்ன மாற்றப்பட்டுள்ளார்.

இதேபோன்றே வடக்கில் முக்கிய படை முகாம் பொறுப்பதிகாரிகளும் உதவியாளர்களும் மாற்றப்பட்டு புதியவர்கள் நியமிககப்பட்டுள்ளனர். வேறும் புதிய நியமனங்களை வழங்கவும் அரசு ஆலோசித்து வருகிறது

இதேவேளை யுத்தமுனைத் தளபதிகளின் நடவடிக்கைகளில் அதிருப்தியுற்றுள்ள படையினர், இவர்களின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதிக்கு நேரடியாகவே புகார்களை தெரிவித்துள்ளனராம். சி

# ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணைகளை படையினர் வாங்கத் திட்டமாம்

(கொழும்பு)

ஏவுகணைகளை எதிர்த்து தாக்கி அழிக்கக்கூடிய ஏவுகணைகளை வாங்க இலங்கை படையினர் திட்டமிட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பதால் இதனை முறியடிக்கும் வகையில் படையினர் செயற்பட வேண்டியுள்ளதாகவும் இதற்கேற்ப ஏவுகணைகளின் தாக்குதலை முறியடிக்கும் விதத்தில் ஏவுகணைகளை பயன்படுத்த படையினர் திட்டமிட்டுள்ளனராம்.

இதுவரை படையினரிடம் ஏவுகணைகளோ ஏவுகணைகளை முறியடிக்க பயன்படும் ஏவுகணைகளோ இல்லையென்றும் அவற்றை உடனடியாக பெற்றுக்கொள்வதன் மூலம் இந்தப் போரில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தலாமெனவும்படை வட்டாரங்கள்கருதுகின்றனவாம்.

இந்த ஏவுகணைகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் தற்போது பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது. இவை விரைவில் பெறப்பட்டதும் வடக்கு கிழக்கில் யுத்த முனைகளில் இவை பயன்படுத்தப்படும் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

எனினும் இதுவரை விடுதலைப்புலிகள் அவ்ரோ விமானங்களை சுட்டு வீழ்த்த பயன்படுத்திய ஏவுகணை எந்த வகையைச் சேர்ந்தது என்பதை படையினர் இனம் காணவில்லையாம், -சி

### பலதும் பத்தும்

#### குடலிறக்கம்

சில வியாதிகளின் தமிழ்ப் பெயர்கள் பொருத்தமாயிருக்கிறதா? சிலவேளை தவறான கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் ஏற்படுத்திவிடுமாம்!

உதாரணமாக -(Hernia) ஹேர்னியா என்பதைக் 'குடலிறக்கம்' என்கிறார்கள். குடலா இறங்கிப் போகிறது? உடலிலுள்ள ஒரு உறுப்பு அல்லது உறுப்பின் பாகம் அல்லது அதைச் சுற்றியுள்ள சவ்வு போன்றவை... அவற்றின் இடத்தைவிட்டு நகர்ந்து... அதைச் சுற்றியுள்ள பகுதிக்கு வருவதே 'Hernia' என்கிறார்கள்.

இது... பெரும்பாலும் வயிற்றுப் பகுதியிலேயே ஏற்படும். வயிற்றுப் பகுதியின் அழுத்தம், இடைவிடாத தொடர் இருமல் போன்றவை கூட இதற்குக் காரணமாகலாம்.

அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம். அதன் பின்... சில நாட்களுக்கு... அதிக பாரம் தூக்குதல், சைக்கிள் ஓட்டுதல தவிர்க்க வேண்டுமாம்!

— மயூரன்

# ஆயுதக் கொள்வனவிற்குச் சென்ற அதிகாரிகள் நாடு திரும்புகின்றனர்

(கொழும்பு)

இலங்கைப் படையினருக்கு இராணுவதளபாடங்களையும், ஆயுதங்களையும் யுத்த விமானங்களையும் கொள்வனவு செய்வதற்காக வெளிநாடுகளுக்கு சென்ற படை அதிகாரிகள் குழுக்கள் நாடு திரும்பத்தொடங்கியுள்ளதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

இராணுவ, கடற்படை, விமானப்படை அதிகாரிகள் கொண்ட பல குழுக்கள் கடந்த இரு வாரங்களுக்கு முன் இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக இஸ்ரேல், ரஷ்யா, இந்தோனேசியா. அமெரிக்கா, பிரிட்டன் இந்தியா உட்பட பல நாடுகளுக்கு சென்றிருந்தன.

இக்குழுக்கள் தத்தமது படைப்பிரிவுகளுக்கு அவசரமாக தேவைப்படும் இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்துள்ளன. விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதல்களை நடாத்தக் கூடிய விதத்தில் விமானப் படையும், கடற்படையும் ஆயுத கொள்வனவுகளை மேற்

[5-ம் பக்கம் பார்க்க]

வதைபடு நிலையில் விடுபடி நாங்கள்
வீட்டினில் தோட்டம் விருப்புடன் செய்வோம்

# ராஜீவ் நினைவஞ்சலி நிகழ்விற்கு ராவ் வந்து அமர்ந்தபோது சோனியா எழுந்து சென்றார்

(புதுடில்லி)

ராஜீவ்காந்தி நினைவாக நடைபெற்ற வைபவமொன்றில் இந்தியப்பிரதமர் திரு. நரசிம்மராவ் கலந்துகொள்ள வந்தபோது அங்கிருந்த சோனியா காந்தி அவ்விடத்தைவிட்டு வெளியேறி விட்டார்.

நேற்று முன்தினம் ராஜீவ் காந்தியின் நாலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி புதுடில்லியிலுள்ள அவரது சமாதிக்கு முன்பாக சமய அனுட்டானங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அவ்விடத்திற்கு பிரதமர் நரசிம்ம ராவ் வந்தார்.

திரு. ராவ் சோனியாவுக்கருகில் அமர்ந்தவுடன் சோனியா அவ்விடத்தைவிட்டு எழுந்து சென்றதுடன் கணவரின் நினைவஞ்சலி வழிபாட்டில் முழுமையாகக் கலந்துகொள்ளவுமில்லை. இச் சம்பவம் அங்கிருந்த பலருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எனினும் இதுபற்றி திரு. ராவ் பெரிதுபடுத்தவில்லையாம்.

அஞ்சலிக்கு பின் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய பிரதமர் ராவ், ராஜீவின் கனவுகளை நனவாக்க அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டுமென்றும் ஆனால் அது மிகக் கடினமானதொரு செயலெனவும் குறிப்பிட்டார்.

ராஜீவை கொன்ற நபர்களை கண்டு பிடிக்கும் விடயத்தில் ராவ் அரசு மெத்தனமாகச் செயற்படுவதால் அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்தே சோனியா ராவின்வருகையை புறக்கணித்ததாகக் கூறப்படுகிறது. -சி

# 10,000 மண்வெட்டிகள் யாழ். அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் 10,000 மண்வெட்டிகளை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவிக்கவுளளது.

யாழ். மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதியே இம் மண்வெட்டிகளை கொழும்பில் இருநது தருவிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக மேற்படி சமாசம் தெரிவித்துள்ளது.

இம் மண்வெட்டிகளை வெகு விரைவில் கப்பல் மூலம் தருவிட்பதற்கான முயற்சிகள் கொழும்பில் நடைபெற்று வருகின்றன.

மண்வெட்டிகள் எடுத்து வரப்பட்டதும் பலநோக்கு கூட்டுரவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் எனவும் சமாசம் மேலும் தெரிவித்துள்ளது. 170-சி

# செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைக்கு நிதி வருகிறது

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கங்களின் யாழ். கிளைக்குரிய நிதியை செஞ்சிலுவையின் சர்வதேச இணைப்புக் குழுவே மாதாந்தம் வழங்கி வருகின்றது.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கொழும்பில் உள்ள தலைமையகத்தில் நிதிநெருக்கடி ஏற்பட்டிருப்பதால் இலங்கையில் உள்ள செஞ்சிலுவை சங்கக்கிளைகளின் செயறபாடுகள் மந்தகதியிலேயே நடைபெற்றுவருகின்றன.

ஆனால் இலங்கைசெஞ்சிலுவை சங்கத்தின் யாழ்.கிளைக்குரிய நிதியைசர்வதேச இணைப்புக் குழுகடந்த மாதம்தொடக்கம் வழங்கி வருகின்றது. 170-சி

# 'முழங்காலை அடித்து உடைத்து என்னை பலாலிக்கு கொண்டு சென்றனர்'

## விடுதலையானவர் தகவல்

(நெல்லியடி)

'சீவல் தொழிலைச் செய்தற்காக சென்ற என்னை, பதுங்கி நின்று கூப்பிட்ட இராணுவத்தினர் எனது முழங்கால முட்டிகளை அடித்து உடைத்துவிட்டு, எனது சாரத்தைக் கழற்றி, கிழித்து கண்களைக் கட்டி, பலாலி இராணுவ முகாமுக்கு கொண்டு சென்றனர்'.

இவ்வாறு கடந்த 17ம் திகதி டெரியவிளான் பகுதிக்கு சீவல் தொழில் செய்யச் சென்று ஸ்ரீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பின்னர் அங்கிருந்து விடுதலையாகி வந்தவர்களில் ஒருவரான உரும்பராய் கிழக்கில் வசிக்கும் பத்திநாதர் தேவதாஸ் (வயது 42) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: எனது குடும்பக் கஷ்டத்தின் காரணமாக இயலாத நிலையிலும் சீவல் தொழிலை மேற்கொண்டு வந்தேன். வழமைபோல் நான் பெரிய விளானுக்கு காலை 9-15 மணியளவில் சென்றபோது அங்கு படையினர் பதுங்கி நின்றனர். நான் அவர்களை விடுதலைப் புலிகள் என நினைத்தே முன்நோக்கிச் சென்றேன்.

அப்போது சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்த இராணுவத்தினர் சிங்களத்தில் பேசியவாறு வந்து என்னைப் பிடித்து அடித்து முழங்கால் முட்டிகளையும் உடைத்தனர். பின்னர் எனது சாரத்தை உரிந்து அதனைக் கிழித்து என்கண்களைக் கட்டி பலமாக அடித்தனர்.

இதேநேரம் அங்கு வேறு நால்வரையும் கைது செய்து கொண்டுவந்து எங்கள் ஐவரையும் பலாலி இராணுவ முகாமுக்கு கொண்டுசென்றனர். அங்கு வைத்து இராணுவத்தினர் எம்மை பலமாகத் தாக்கினர், நாம் குழறி அழுதாம்.

மலசலம் கழிப்பதற்கு பெரும் கஷ்டப்பட்டு மலசல கூடத்தை தேடினோம் அங்கு மலசல கூடம் இல்லை. பெரும் வேதனையுடன் இருநாட்களை ஒருவாறு போக்கினோம்.

கப்பலில் எமை திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்வது பற்றி தெரிந்ததும்சந்தோஷப் பட்டோம். கோமாரி கப்பலில் காங்கேசன் துறையில் வைத்து ஏற்றப்பட்டதும் இக் கப்பலிலுள்ள மலசல கூடத்தில் மலசலம்கழித்தோம் என்றும்வேதனையுடன்தெரிவித்தார. 160-சி

# நாலு எழுதுனர்க்கு பதவி உயர்வு கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றத்தில் கடமையாற்றும் நான்கு எழுதுனர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளரால் பதவி உயர்வுவழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் பொது எழுதுனர் சேவை வகுப்பு இரண்டின் 'ஏ' பிரிவுக்கு பதவிஉயர்த்தப் பட்டுள்ளார்கள்.

பொ. இராமநாதன், எஸ். தர்மகுலசிங்கம், இ. தங்கராசா, எஸ். கந்தசாமி ஆகியோரே இந்தப்பதவிஉயர்வை பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பதவி உயர்வு நியமனக்கடிதங்கள் வடகிழக்கு உள்ளூராட்சி ஆணையாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. -170-சி

# சண்டையை விலக்கச்சென்ற மாமனுக்கு கத்திவெட்டு

[யாழ்ப்பாணம்[

மகளுக்கும் மருமகனுக்குமிடையில் ஏற்பட்ட குடும்பத் தகராற்றை விலக்கிவைக்கச் சென்ற மாமன், மருமகனின் கத்திவெட்டுக்கிலக்காகி படுகாயமடைந்தார்.

பளை இத்தாவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கட்டைக்காடு நித்தியவெட்டையில் இருந்து இடம்பெயர்ந்த கட்டையன் வேலன் (வயது 73) என்ற வயோதிபரே கத்திவெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். போதனாவைத்தியசாலைச்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். 90 சி

# தமிழ்மக்களிடமிருந்துபுலிகளை பிரிக்க அரசு முயல்கிறது

## பி. பி. ஸி. கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை தமிழ் மக்களிடமிருந்து பிரிக்கும்முயற்சியில் அரசு செயற்படுகிறதென பி. பி. சி. யின் இலங்கை செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத்தின் ஒரு பகுதி நேற்றுமுன்தினம் அரசு சார்பு பத்திரிகைகளில் வெளியிடப்பட்டமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழ்க்கட்சித் தலைவர்களுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தையை அரசாங்கம் நடாத்தியுள்ளது. மேலும் பெரும்டான்மை சிங்கள மக்களின் நலனும் புதிய சமஷ்டி அமைப்பை ஒட்டியதாகவே அமைந்துள்ளது என்பதனை சிங்கள மக்களுக்கு உணர்த்துவது அரசாங்கத்திற்கு பெரும் சிரமமாகவே இருக்கும்.

சமஷ்டிஅமைப்பை கொடுப்பதானது தமிழர்களுக்கு தனி நாட்டை பிரித்துக் கொடுப்பதற்கு சமானமாகுமென முக்கிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிட்டதனையும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் அரசியல் சாசனத்தைத் தயாரிப்பதில் அரசாங்கம் முழுமுயற்சியுடன் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தார.

தமிழ்மக்களை இராணுவரீதியில் தோற்கடிக்க அரசாங்கம் முயன்றுகொணடிருக்கும் அதே நேரம் தமிழ்மக்களுக்கு நியாயமாக நடந்து கொள்வதாகக் காட்டிக்கொள்ளவும் அரசாங்கம் முயலுவதாகவும் அவர் தெரிவித்தார். க-சி

# யாழ். நகர்ப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(ஆனைப்பந்தி)

யாழ், நகர் பகுதியில் மீண்டும் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றனகடந்த வெள்ளி, சனி ஆகிய இருதினங்களில் மூன்று சைக்கிள்கள் திருட்டுப் போய்விட்டதாக யாழ். காவல் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். பருத்தித்துறை வீதியில் உ. சிவநேசன் என்பவரின் சைக்கிளும், சொட்டடியில் து. ஜெகநாதன் என்பவரின் சைக்கிளும், அடைக்கல மாதா கோவிலடியில் து.சிவானந்தன் என்பவரின் சைக்கிளுமே திருட்டுப்போயுள்ளன, இம்மூன்று சைக்கிள்களும்

[5-ம் பக்கம் பார்க்க]

# யாழ். பிரதேச செயலர் பிரிவில் 9,512 குடும்பங்களிற்கு நிவாரணம்வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 9,512 குடும்பங்கள் வறுமை நிவாரண முத்திரைகளை பெற்று வருவதாக யாழ் பிரதேச செயலாளர் க. குணராசா தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கிடையேயான கலந்துரையாடலில் பிரதேச செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

இதனைவிடகரையோரபகுதியில் 3160 மீனவர்கள் மீனவ நிவாரணத்தை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். 170-சி

# காங்கிரஸுடன் கூட்டணி வேண்டாம் கருணாநிதிக்கு வை.கோ. எச்சரிக்கை

[சென்னை]

இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்க முற்படும் தி, மு. க. தலைவர் மு. கருணாநிதிக்கு காஷ்மீர் முன்னாள் முதல்வர் பாருக் அப்துல்லாவிற்கு ஏற்பட்ட நிலைமையே ஏற்படுமென தி. மு. க. விலிருந்து வெளியேறிய ம. தி. மு. க. தலைவர் வை. கோபாலசாமி எச்சரித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் கூட்டு ஏற்படுத்திக்கொண்டதால் பாருக் அப்துல்லாவிற்கு தேசிய மாநாட்டுக்கட்சி ஒத்துழைக்க மறுத்துவிட்டது. இதே நிலைமைதான் தி. மு. க. விற்கும் ஏற்படும். காங்கிரஸ் தனது நலனுக்காகவே ஏனைய கட்சிகளைப் பயன்படுத்துகிறது அதேபோன்றநிலை தி. மு க. வுக்கும் அதன் தலைவர் கருணாநிதிக்கும் ஏற்படும் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை அடுத்த வருடம் தேர்தல் வருவதையொட்டி தி. மு. க. காங்கிரசுடன் கூட்டணி அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

காங்கிரஸ் - தி. மு. க. கூட்டணி ஏற்படுத்தும் முயற்சியில் திரு. சுப்பிரமணிய சுவாமி தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. க சி

# தமிழ்த்தினப் போட்டி

(ஆனைப்பந்தி)

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்தியமகா வித்தியாலயத்தின் பாடசாலை மட்டத்திலான தமிழ்த்தின போட்டி அண்மையில நடைபெற்றது.

கோட்ட மட்டபோட்டியில் பங்குபற்ற தகுதியுடையோர் இப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டனர்.

# முன்னோர் பற்றிய வரலாறுகள் நூலுருப் பெறவேண்டும் - புதுவை இரத்தினதுரை

[யாழ்ப்பாணம்]

தீவகம் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டது. தீவக மக்கள் இந்த மண்ணையும் எமது மக்களையும் வெகுவாக நேசிப்பவர்கள் எம் மத்தியில் இன்று எமது முன்னோர் பற்றிய வரலாற்று நூல்கள் மிகக் குறைவாகவே உள்ளது. இவர்களின் வீரம், தியாகம், ஆற்றல், திறமை போன்றவைகள் எமது எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் நூல் வடிவில் உருவாக்கப்படவேண்டும்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற 'வேலணைத்தீவுப் புலவர்கள்' வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு அறிக உரை நிகழ்த்துகையில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்கவிஞர்புதுவை இரத்தினதுரை தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. பொ. மாசிலாமணி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கவிஞர் புதுவை இரத்தினதுரை தொடர்ந்து பேசுகையில்; எவன் ஒருவன் தனது வீட்டை நேசிக்கிருனே அவன் தனது நாட்டையும் தனது மக்களையும் நேசிப்பவனுக இருக்கிருன். வீட்டுக்கு உதவாத ஒருவரை நாட்டுக்கு உதவுவார் என எந்த வகையிலும் கருதமுடியாது.

வேலணைத் தீவுப் புலவர்கள் வரலாறு நூல் வெளியீட்டின் மூலம் இந்த ஊரின் வரலாறுகளை அறிய முடிகிறது. கடந்த காலங்களில் இந்த மண்ணில் இருந்த கவிஞர்கள், புலவர்கள், எழுத்தாளர்களின் வரலாறுகளை அறிய முடிகிறது. இந்த வகையான பெறுமதிமிக்க நூல்கள் வெளியிடுவதால் எமது எதிர்காலச் சந்ததியினர் இவர்களின் வீரம், தியாகம், ஆற்றல், அறிவு பற்றிய விடயங்களை அறிந்து கொள்வதற்கு இது ஒரு ஆவணமாகிறது.

நாம் எமது சமூகத்துக்குப் பயன்படக்கூடிய சகல தேவைகளையும் செய்யவேண்டும். எமது முன்னோர்களை இந்த வரலாற்று நூலின்மூலம் அறித்துகொள்ளக்கூடியதாக உள்ளது. எமது பிரதேசத்தில் அதிசயிக்கக்கூடிய எத்தனையோ நிகழ்வுகள் கடந்தகாலங்களில் நடைபெற்றுள்ளன, இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அன்று திரு. நவரத்தினராசா பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை புரிந்தார். அமெரிக்காவுக்கு இங்கிருந்து எமது தமிழர் ஒருவர் அன்னபூரணி என்ற கப்பலை ஓட்டிச்சென்றுர். இன்று ஏறக்குறைய ஏழாயிரம் போராளிகள் எமது சுதந்திரப்போராட்டத்தில் கலந்துகொண்டு மாவீரர்கள் ஆனுர்கள். இந்த நிகழ்வுகள் யாவும் அச்சுருவாக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படவேணடியது ஒரு காலத்தின் தேவையாகின்றது.

எமது மண்மீட்புப் போராட்டத்தில் வீரகாவியம் படைத்த மாவீரர்களின் வீர லாறுகள் நூல்வடிவில் வெளியிடப்படவேண்டும். இவர்களின் வீர வரலாறுகள் ஆவணமாக்கப்பட்டு ஒவ்வொருவரினதும் கைகளிலும் தவள வேண்டும். இந்திய அமைதிப்படை எமது மண்ணை ஆக்கிரமித்த வேளையில் நாற்கதுக்கும் மேற்பட்ட எமது பவிஞர்கள் மரணத்தை தழுவிக்கொண்டார்கள். இந்தக் கவிஞர்களின் வரலாறுகள் நூலுருவில் வெளியிடப்படவேண்டும். இவற்றை எமது எதிர்காலச் சந்தியினர் தெரிந்துகொள்ளக்கூடியவகையில் ஆவணமாக்கப்பட வேண்டும்.

தீவக மக்கள் இந்த மண்ணை வெகுவாக நேசிப்பவர்கள். இவர்கள் தமது கிராமத்தை தமது மக்களை நேசிப்பவர்கள். இன்று இடம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தீவக மக்கள் தமது பகுதிகளுக்குத் திரும்பும் காலம் வெகுவிரைவில் நெருங்கிக் கொண்டிருக்கிறதென்றும் தெரிவித்தார். 162-சி

# மருமகனின்கத்திவெட்டுக்கு மாமியார் இலக்கானுர்

(ஆனைப்பந்தி)

மருமகனின் கத்திவெட்டுக்கிலக்கானதில் மாமியார் படுகாயமடைந்தார்.

கடந்தவாரம் யாழ். புகையிரத நிலையமுசாமில் (ஸ்ரீபன் குடியிருப்பு) இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது தீவகம்-சரவணையைச் சேர்ந்த ஜோ. லூர்த்து (வயது-65) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

குடும்பத் தகராறிஞல் இவரது மகளின் கணவர் கத்தியிஞல் வெட்டியதாகவும் தலையில் பலத்த வெட்டுக்காயத்திற்குள்ளான இவர் உடன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் வெட்டிய நபர் குடியிருப்புவாசிகளால் பிடித்து கட்டிவைக்கப்பட்டு பின் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 101-சி

## வயோதிபரை

[1ம் பக்கத்தொடர்ச்சி]

நேற்றும் இதேபோல அப்பகுதி தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்களை இராணுவம் பிடிகக முயன்றதாகவும் தோட்டத்தில் இருந்தவர்கள் கப்பி ஓடி வந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இ 90

## "பாவை" வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

''பாவை'' முத்திங்கள் அறிவுமலர் வைகாகி, ஆடி மாதத்திற்கான இதழ் வெளி வந்துள்ளது.

இதில் மாணவர்க்கான பொதுஅறிவு, இயற்கை, வைத்தியக் கைமுறைகள் (பாம்புக்கடி), உலக அதிசயங்கள், டைனசோர், மழலைப் பூக்கள், தயா பதில்கள், அறிவு விஞ விடைப் போட்டிகள் போன்ற பல அம்சங்கள் இடம்பெறுகின்றன. -சி

## புலிகள் புதிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றிக்கொண்டு வருகின்றனர்.

இராணுவம் புதிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்தாலும், விடுதலைப் புலிகள் அதற்கு ஏற்றவாறு தமது இராணுவத் தந்திரங்களை மாற்றிக்கொண்டே இருக்கின்றனர் என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. வி இ

## புலிகள்-அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே கம்போடிய விவகாரத்தில் தலையிட்டு சுமுகநிலையை ஏற்படுத்துவதில் இவர் வெற்றிகண்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் இலங்கை இனப்பிரச்னை சுமுகமாக தீர்த்து வைக்கப்படவேண்டும் என்பதில் அவுஸ்திரேலிய அரசாங்கம் நீண்டகாலமாக ஆர்வம் கொண்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-இ

## ஆயுதக்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளன.

இக்குழுக்கள் தமது ஆயுதக் கொள்வனவுகளை முடித்துக் கொண்டு நாடு திரும்பத் தொடங்கியுள்ளன ஆத வேளை படையினருக்காக கொள்வனவு செய்யப்பட்ட பெருமளவு ஆயுதங்கள் கொழும்பு துறைமுகத்திற்கு வரத்தொடங்கியுமுள்ளன. இவை தற்போது இறக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# உலகில் உஷ்ணம் அதிகரிப்பு; பூமியின் ஸ்திரத்தன்மை குறைகிறது

[புதுடில்லி]

உலகத்தின் உஷ்ணம் உயர்ந்துகொண்டே வருகிறது. அத்துடன் மக்கள் நெரிசல் மிகுந்து காணப்படுகிறது. மேலும் இப் புவியின் ஸ்திரமற்ற தன்மையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

நேற்றுமுன்தினம் வாஷிங்டனில் உலகக் கண்காணிப்பு நிறுவனம் வெளியிட்ட அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1994-ம் ஆண்டில் உலகத்தின் சராசரி வெப்பநிலை 15.32 பாகை செல்கியசாக இருந்தது. ஓர் ஆண்டுக்குள் இது 0.12 பாகை செல்சியஸ் கூடுதலாக இருக்கிறது.

ஆயினும் ஓசோன் படலத்தின் அடர்த்தியை குறைப்பதன் மூலம் உலகம் வெப்பமாவதை துரிதப்படுத்தும் குளோரோ புளூரோ சூர்பன் என்ற நச்சுப்புகை வெளிப்படுவது ஆருவது ஆண்டாக தொடர்ந்து குறைந்து வருகிறது.

மாற்று எரிசக்தி உபயோகிப்பதும் சென்ற ஆண்டு அதிகரித்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளரும் நாடுகளில் உள்ள கிராம மக்கள் சூரிய சக்தியை உபயோகிப்பது, அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விவசாய உற்பத்தித் துறையில் உணவுத் தானியங்கள் மற்றும் சோயா, அவரை உற்பத்தி அதிகரித்த போதிலும் உலக தேவையை சமாளிக்க இயலவில்லையென்றும் உலகெங்கிலும் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக உணவுத் தானியங்களின் கையிருப்பு குறைந்து வருவசாகவும் அந்த அறிக்கையிற் தெரிவிக்கப்பட்டுள்ளது. -இ-சி

# இராசி பலன்

23-05-1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு வைகாசி -09)

நவமி மு. ப, 9-41 வரை' பூரட்டாதி, மரணயோகம் மு. இ. 11-26 வரை. இராகு காலம் பகல் 2-52 முதல் 4-22 வரை, சுபவேளை காலை 10-22 முதல் 11-52 வரை.

மேடம்: தொழில் நஷ்டம், தைரியக் குறைவு. அலைச்சல்.

இடபம்: புதிய முயற்சி, தொழில் சிறப்பு, சகாதர உதவி.

மிதுனம்: அதிக வாய்ப்பு, குடும்ப சுகம், பயணம்.

கடகம்: பிறர் கண்டனம். சபல புத்தி, கடன்படல்.

சிங்கம்: இனசன பகை, கருத்துவேறுபாடு, பயமிகுதி.

கன்னி: தெய்வீக சிந்தனை. அதிகாரிகள் உதவி. சுபச் செய்தி.

துலாம்: காரிய சித்தி, வாக்கு வன்மை, புதிய உறவு.

விருச்சிகம்: நோய் உபாதை, வழிப்பயம், வேலைப் பளு.

தனுசு: சுயநலப்போக்கு. கெட்ட நடத்தை, மன வேதனை.

மகரம்: அறிஞர் உபதேசம், கல்வியிஞல் சிறப்பு, பாராட்டு.

கும்பம்: குதர்க்க வாதம், மனைவி துயர், கோப வார்த்தை.

மீனம்: ஜனன சுகம், உறவினர் வருகை, பொதுப்பணி.

— ஜோஸ்யர்

# தெற்காசிய பிராந்தியத்தில் ஏவுகணை உருவாக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

தெற்காசியாவில் பயங்கர ஏவுகணைகளின் உருவாக்கம அதிகரித்துவருவது குறித்தும், பிராந்தியத்தல் அணு ஆயுத விவகாரத்தில் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டுள்ளது குறித்தும் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் இவான்ஸ் ஹரே கவலை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் யேலும் கூறுகையில்;

இந்தியா 'பிருதிவி' ஏவுகணையை விருத்தி செய்வதும் பாகிஸ்தான் சீனுவிடமிருந்து அண்மையில் இரண்டு ஏவுகணைகளை கொள்வனவு செய்தமையும் எமது நாட்டிற்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஏவுகணையை விருத்தி செய்வதால் பிராந்திய ஒருமைப்பாடு சிதைவுறுகின்றது இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாட்டுத் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இது பற்றி தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

சர்வதேச அணு ஆயுத தடை பரவல் ஒப்பநதத்திற்கு எதிரான ஒப்பந்தம் ஒன்றில் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கைச்சாத்திட வேண்டும் என்று தான் வலியுறுத்திக் கூறியதாகவும் தெரிவித்தார். க-சி

## யாழ்.நகர்ப்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பூட்டிய நிலையில் வைக்கப்பட்டிருந்தபோதே திருடப்பட்டுள்ளதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. -101-சி

## போர் வெடித்துள்ள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கூறினுர்.

வெளிநாட்டு அமைச்சர் ஜெயகுமாருடன் உரையாடிய போது' இலங்கையின் சம்பவங்கள் பற்றிக் குறிப்பாக, வடக்கு-கிழக்குப் பிரச்னைகள் பற்றி அவர் விரிவாக எடுத்துக் கூறினுர்.

வடக்கு-கிழக்கு மோதல் சம்பவங்களினுல் ஓரளவு பீதி இருந்தபோதிலும், முதலீடுகளை அது அதிகம் பாதிக்கவில்லை என அமைச்சர் கதிர்காமர் தெரிவிவித்தார்.

வடக்கு-கிழக்கு யுத்தம் கடந்த 10 ஆண்டுகளாக நடைபெற்றுவருகின்றது கொழும்பில் இருந்து 400 கிலோ மீற்றருக்கு அப்பால் அந்த யுத்தம் நடைபெற்று வருகிறது. எனினும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படவில்லை என்றும் அமைச்சர் கதிர்காமர் கூறினுர். கே சி

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மைச்சர் செல்வி ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவுக்கு அவசரமாக எழுதிய கடிதத்தில் வற்புறுத்திக்கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்க்கு தொடர்ந்து ஏற்பட்டுவரும் பிரச்னைகளுக்கு முடிவு கட்ட அந்நாட்டு அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும் அக்கடிதத்தில் முதல்வர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார்.

கடலோர பாதுகாப்பு திட்டத்திற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு இருப்பதாகவும் சென்னையில் வெளியிட்டுள்ள மாநில அரசின் செய்தி குறிப்பில் முதல்வர்குறிப்பிட்டுள்ளார்.

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு துறைமுக பாதுகாப்பு பொறுப்பை சிறிலங்கா கடற்படை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது'

விடுதலைப் புலிகள்கொழும்பு துறைமுகத்தையும்தாக்கலாம் என்று கருதப்படுவதனுல் துறைமுகத்துக்குப் பொறுப்பான அமைச்சர்என்ற வகையில்தான் சில பாதுகாப்பு நடவடிககைகளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் எம் எச் எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

வெங்காயம் உருளைக்கிழங்கு போன்ற அழுகும்நிலையிலுள்ள பொருள்களை கொண்டுவரும் கப்பல்கள் காலி துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

சரியான காப்புறுதியும் ஆவணங்களும் இல்லாத கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டாது.

புலிகள் வெடிமருந்து அடங்கிய படகுகளுடன் துறைமுகத்திற்குள் ஊடுருவி தாக்குதல்கள் நடத்தக்கூடும் என அதிகாரிகள் அஞ்சுகின்றன. எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதுகாலவரை கொழும்பு நகர்ப்பகுதியில் கடுமையாக எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்போது துறைமுகத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கே-இ

கடந்த 20-ம் திகதி கச்சதீவு அருகே தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டதற்கு அவர் பெரும் கண்டனமும் தெரிவித்துள்ளார். கே இ

# காங்கிரஸ் பிளவைச் சீர்செய்ய நரசிம்மராவ் பதவி விலகவேண்டும்

## சோனியா ஆலோசனை

(புதுடில்லி)

''காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவை சீர்செய்ய வேண்டுமானால் பிரதமர் நரசிம்மராவ் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து உடனடியாக விலகவேண்டும். இவ்வாறு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி ஆலோசனை தெரிவித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவினால் பிரதமர் ராவ் எதிர் வரும் ஜூன் மாதத்துக்குள் தமது மந்திரிசபையில் பாரிய மாற்றங்களைச் செய்யத்திட்டமிட்டுள்ளதாகவும்' இப்புதிய அமைச்சரவையில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் மிக நெருங்கிய நண்பர்களும் வேறுபுதியவர்களும் இடம் பெற இருப்பதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

வி க இ

## 1995 ஏப்ரல் மாத ஒளிநாடா வெளிவந்துவிட்டது

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வீடியோ சஞ்சிகையான ஒளிவீச்சு 1995 ஏப்ரல் மாத ஒளி நாடா வெளிவந்துவிட்டது. இதில் திருகோணமலை துறைமுகத்தினுள் ஊடுருவி நடாத்தப்பட்ட கரும்புலி தாக்குதலினால் சிறிலங்கா கடற்படையின் ரணசுறு, சூரயா ஆகிய யுத்த கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டமை,

தமிழீழ வான் பரப்பில் சிறிலங்கா வான் படையின் இரண்டு அவ்ரோ விமானங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டமை,

அன்னை பூபதியின் 7-ம் ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள்,

கலை நிகழ்ச்சிகள்,

மற்றும் பல வழமையான அம்சங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

இவ்ஒளி நாடா இன்று செவ்வாய்க்கிழமை முதல் யாழ். சிறிதர் திரையரங்கில் காண்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான் பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தோட்டப் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால். அப்பகுதிச் சிறுபயிர்கள் சேமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இ 50

## வடக்கு கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்:

தேர்தல் காலத்தின் போது இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு நாம் வாக்குறுதிகளை அளித்தோம். யுத்தத்தினால் அழிந்து கொண்டிருக்கும் நாட்டில சமாதானத்தை ஏற்படுத்தி யுத்தத்துக்கு முடிவு கட்டுவோம் என்று வாக்குறுதி கொடுத்தோம். மக்கள் எமது வாக்குறுதிகளை அங்கீகரித்துஎமக்கு தமது அமோக ஆதரவை வழங்கினர்.

ஆனால் இன்று எமது ராணுவத்தினர் கொடூரமான ஒரு யுத்தத்தில் ஈடுபடுவதற்கு வழி ஏற்பட்டது குறித்தும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மக்கள் குறிப்பாக இளம் சமுதாயத்தினர் மீண்டும் அழிவுக்குள்ளாகிவருவது குறித்தும் நான் மிகுந்த கவலை கொள்கிறேன்,

வடக்கு கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காண்பதில எமது அரசு மிகவிரைவாக செயல்பட்டு வந்தது, விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து சமாதான முயற்சிகளை ஆரம்பித்தோம்.

தமிழ் மக்கள் விவகாரத்தில் கடந்த அரசு நடந்து கொண்ட முறைகளால் தமிழ் மக்களுக்கும் அப்போதைய அரசுக்கு மிடையில் குரோதமும் நம்பிக்கையின்மையும் ஏற்பட்டது, ஆனால் நாம் பழைய அரசின் அணுகுமுறைகளைப் பின்பற்றாது தமிழ் மக்களிடையே நம்பிக்கைத் துளிரை ஏற்படுத்த செயல் பட்டோம்.

இனப்பிரச்னைக்கும், யுத்தத்துக்கும் உள்ள ஒரே தீர்வு தமிழ் மக்களின் பிர்ச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதே யாகும் சமாதான முயற்சிகள் மூலமே அதனையும் மேற்கொள்ள வேண்டும்.

சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில எமது இராணுவத்தினருக்குப் பயிற்சிகள் வழங்குவது நிறுத்தப்படவில்லை. கடந்த 12 வருட காலத்தில் ஐ.தே.க. அரசு இராணுவத்தின் பாதுகாப்புக்கு வழங்காத அனைத்து வசதிகளையும் நாம் வழங்கினேம். ஆனால் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இராணுவத்திடம் கோரிக்கை விடுத்தோம்.

சமாதானத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியாதுமோனால், வேறு வழிகள் மூலமாவது அதனை ஏற்படுத்த எனது அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்றார்.

இ

## புலிகளுடனான போரில் அரசு தோல்வியையே தழுவும்

### லண்டனிலுள்ள சிங்கள விமர்சகர் கூறுகிறார்

(லண்டன்)

பிரிவினைப் போராட்டங்கள் நடந்த நாடுகள் அனைத்திலும் தனியான நாடுகள் பிரிந்து உருவாகியுள்ளன. சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளுடனான போரில் தோல்வியையே தழுவும் என லண்டனிலுள்ள சிங்கள விமர்சகரான அற்ஜியன் விஜேமானி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுமார் 16 படைச் சிப்பாய்களுக்கு ஒரு விடுதலைப்புலி என்ற வீதம் உள்ளது. அப்படி யிருந்தும் புலிகளின் தந்திரோபாயத்தினால் அரசு போரில் வெல்ல முடியாது. நீண்ட காலமாக போரே நடைபெறும். இதனால் அழிவைததர வேறொன்றையும் காண முடியாது,

போராட்டங்கள்நடந்த எதியோப்பியா உட்பட பல நாடுகளில் பிரிவுகள் ஏற்பட்டு புதிய நாடுகள் தோன்றின. இந்த அனுபவங்களை சிறிலங்கா பார்க்க வேண்டும்.

பிரிவினைப் போராட்டங்கள் நடந்த நாடுகளில் இயக்கங்களிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருந்தும் அவை பயன்படுத்தப்படவில்லை ஆனால் தாக்குதல் உக்கிரம் காரணமாக நாடுகள் பிரிந்தன.

இங்கே புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை பயன் படுத்துகின்றனர்

அந்த நாடுகள் போரில் தோற்றது போல சிறிலங்கா அரசும் போரில் தோற்கும் என திரு. விஜேமான்ன மேலும் தெரிவிததுள்ளார்.

கே-இ

## வீட்டிலிருந்து புறப்பட்டவர் இணற்றில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டிலிருந்து நேற்று முன் தினம் புறப்பட்டவர் நேற்று கிணறொன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நல்லூர் கிழக்கில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில அவ்விடத்தைச் சேர்ந்த கந்தையா நித்தியானந்தன் (28 வயது) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இ-90

### யாழ். நகரில்

## விமான சிதைவுகள் மக்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளால் அண்மையில் சுட்டு வீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானங்களின் சிதைந்துபோன பாகங்கள் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் மக்கள் பார்வைக்கு நேற்று முதல் வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து ஐந்து நாட்கள் வரை இந்த விமான சிதைவுகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் அண்மைக் காலங்களில் சிறிலங்கா ராணுவத்தினருடனான மோதல்களில் கைப்பற்றப்பட்ட பல்வேறு வகையிலான நவீனரக ஆயுதங்கள் சக்தி வாய்ந்த எறிகணைகள், மிதிவெடிகள் போன்றவையும் மக்கள் பார்வைக்கு அங்கு வைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சு அனர்த்தங்களால் சிதைந்து போயிருக்கும், கோவில்கள், தேவாலயங்கள், வைத்தியசாலைகளின் புகைப்படங்கள் மற்றும் இராணுவ அட்டூழியங்களுக்குள்ளாகியுள்ள பொது மககளின் புகைப்படங்களும் காட்சிக்கு வைககப்பட்டுள்ளன.

இ-162

## யாழ்ப்பாணத்தில் 31.5 மி. மீ ! மழை பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினமிரவு 31.5 மில்லி மீற்றர் மழை பதிவாகியிருப்பதாக திருநெல்வேலியில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினமிரவுபெய்த கடும் மழை யாழ்குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெய்திருப்பதாக தெரிவிக்கப் பட்டது.

170-இ

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி-கிழக்கு உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டப்போட்டிகளின் விபரம் வருமாறு:

இன்றையமுதல்ஆட்டத்தில் ஈச்சமோட்டை கழகத்தை எதிர்த்து பொற்பதி கழகமும் 2வது ஆட்டத்தில் சித்தி விநாயகர் கழகத்தை எதிர்த்து யங்ஸ்ரார் கழகமும், 3வது ஆட்டத்தில் சென் ரேக்ஸ் கழகத்தை எதிர்த்து கவி கழகமும் மோதும்.

வி-இ

## அரசு-புலிகளிடையில் மத்தியஸ்தம் செய்யும் சூழ்நிலை இப்போது இல்லை!

### ஆஸி. அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு]

அவுஸ்திரேலியா, இலங்கை அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே மத்தியஸ்தம செய்யும் சூழ்நிலை தற்போது இல்லையென நேற்று ஒரு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் சரட் இவான்ஸ் தெரிவித்துள்ளார்.

தனது விஜயத்தின் இறுதியில் அவர் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:

இப்போதைய சூழ்நிலையில் அவுஸ்திரேலியாவோ வேறு எந்த மூன்றாவது தரப்பினரோ பங்குபற்றக்கூடிய சூழ்நிலை இல்லை என்றும் கூறினார்.

இரு தரப்பினருக்கும் இடையே அவுஸ்திரேலியா மத்தியஸ்தம் செய்யக் கருதியுள்ளது என்ற கூற்றையும் அவர் மறுத்தார்.

இரு தரப்பும் கேட்டுக் கொண்டால் தங்கள் சேவையை வழங்க அவுஸ்திரேலியா தயாராக இருந்த போதிலும் தற்போது காணப் படும் சூழ்நிலையில் அவுஸ்திரேலியாவின் ஆக்கக் கூடிய பங்கு ஏதும் இல்லை என்றும் அவர் கூறினர். இலங்கை, அவுஸ்திரேலியா விடமிருந்து இராணுவ உதவி கோரியுள்ளது என்ற கருத்தையும் இவான்ஸ் மறுத்தார்.

இந்து மாகடல் ஓரத்தில் அமைந்துள்ள நாடுகளுக்கிடையே மேலும் அதிகமாக கூட்டுறவை தூண்டுவதே தன்னுடைய பயணத்தின் உண்மையான நோக்கம் எனவும் அவர் கூறினர். கே-இ

## மீனவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறை பொலிகண்டி, திக்கம் போன்ற மீனவக்குடியிருப்புக்களை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

திரளாக வந்த கடற்படைக் கப்பல்களால் பொதுமக்கள் பெரும் அச்சத்துடன் காணப் பட்டனர்.

கடற்படையினரின் அதிகரித்த நடமாட்டத்தால் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை'

இ-51

## அரசாங்க லீவுகளில் குறைப்பு இல்லை

[கொழும்பு]

அரசாங்க ஊழியர்களின் 45 நாள் லீவைக் குறைப்பது பற்றியோ அல்லது அரசாங்கத்தினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட லீவுகளைக் குறைப்பது பற்றியோ, எதுவித தீர்மானமும் எடுக்கவில்லை என்று அரச ஊழியர்களின் லீவுகள் குறைப்பது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது விடயம் தொடர்பாகப் பத்திரிகைகள் உண்மைக்கு மாறான முறையில் விஷமப் பிரசாரம் செய்யும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் அக்குழு குற்றம் சாட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஒரு தீர்மானம் எடுப்பதற்கு முன் பொது அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் ஆலோசனையை நாடவுள்ளதாகவும் பொது நிர்வாக அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளையில் அரசாங்க லீவுகளைக் குறைக்கும் முகமாகச் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்குச் செலவுத் தொகை ஒன்றை வழங்குவதற்கு இக்குழு சிபார்சு செய்யலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கூடுதல் வேலை நாட்கள் இருபபது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இ

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post offic Sri Lanka under Licence number B/1633613.